**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வாசுகி | Prosecution | P.W –2 Cross |
| Father Name | ஜீவா | Court | JM, Court, Sirkali. |
| Village | திட்டைரோடு | Taluk | சீர்காழி |
| Age | 50/2025 | District | மயிலாடுதுறை |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **18.11.2025.**

<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது.</u> **எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

20.01.2025 அன்று எனது மகனுக்கும் லட்சுமி என்ற எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது என்றால்சரிதான். திருமணத்திற்கு எனது முழுசம்மத்துடன் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என் மகன் ஒரு வருடமாக எதிரியை காதலித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் 6 மாத காலமாக தெரியும். அந்த 6 மாத கால கட்டத்தில் எதிரி என் வீட்டிற்கு வர போக இருந்தாரா என்றால் குறைந்த நாட்கள் இருக்கும். 25.01.2025 அன்று சீர்காழீ AWPS யி'ல் எனது மகனுடன் புகார் அளிக்க சென்றேனா என்றால் எனது மகனுடன் புகார் அளிக்க சென்றேன். நான் சிதம்பரம் RMMCHயில் உள்நோயாளியாக இருந்த போது எதிரி எனக்கு ஏதேனும் முதலுதவி செய்தாரா என்றால் எதுவும் செய்யவில்லை நான் எதிரியை பார்க்கவும் இல்லை.

எப்போது உள்நோயாளியாக இருந்தேன் என்றால் தேதி நாட்கள் சொல்ல இயலாது. போலிசார் என்னை 25.01.2025 அன்று விசாரித்தார்கள். நெப்போலியன் என்ற நபர் எனது மகனிடம் செல்போனில் பேசும்போது அந்த விபரம் எனக்குதெரியுமா என்றால் என்னிடமும் பேசினார். திருமணத்திற்கு முன்பு எதிரி 05.01.2025 முதல் எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் மகனது திருமணத்தை வெகு விமரிசையாக செய்தேன் என்றால் செய்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு சடங்கு சம்பிரதாயம்

ஏதேனும் நடந்ததா என்று கூற முடியுமா என்றால் நாங்கள் எதுவும் நடத்தி வைக்கவில்லை. திருமணத்திற்கு பிறகு என் மகன் எதிரியை வெளியில் எங்கும் அழைத்து சென்றாரா என்றால் எங்கேயும் அழைத்து செல்லவில்லை. எனது மகன் சீர்காழி AWPS புகார் கொடுக்கும்போது நான் சென்றேனா என்றால் சுமார் காலை 8.00 மணிக்கு சென்றுள்ளேன். புகார் அளிக்கும் போது எனது மகனுடன் யார் யார் வந்தார்கள் என்றால் RBL வங்கியில் வேலை பார்த்த எனது மகனின் நண்பர்கள்வந்துள்ளார்கள்.

நான் எதிரிக்கு எனது மகன் திருமண செய்யும் தருணத்தில் ஏதேனும் பவுன் மற்றும் பொருட்கள் மருமகள் என்ற அடிப்படையில் செய்தேனா என்றால் செய்துள்ளேன். நெப்போலியன் எதிரியை ஏற்கனவே திருமணம் செய்த விபரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். நெப்போலியன் சொன்ன பிறகு தான் அந்த விபரம் எனக்கு தெரியும். திருமணம் நடந்து எத்தனை நாட்கள் எங்கள் வீட்டில் இருந்தார் என்றால் 3 நாட்கள் வீட்டில் இருந்தார். எதிரியுடன் வேலை பார்த்தாக கூறப்படும் மருத்துவர்கள் யாரேனும் திருமணத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் எனது மகன் திருமண விபரத்தை Face bookயில் நண்பர்களுடன் புகைப்படம் ஏதேனும் பதிவு செய்த விபரத்தை காவல்நிலையத்தில் ஆவணம் மூலம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

நெப்போலியன் ஏற்கனவே 5 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்த விபரம் எதிரி ஆணைக்காரன் சத்திரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக கூறியுள்ளார் அந்த விபரம எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த புகாரின் விபரமும் மனுரசீதும் என்னிடம்காட்டியுள்ளார்களா என்றால் காட்டவில்லை. திருமணம் மாலை 5.30 மணியளவில் தான் செய்து வைத்தோம் என்றால் சரிதான். மாலையில் தென்பாதி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் தான் என் மகன் எதிரிக்கு தாலி கட்டினார் என்றால் சரிதான். இந்து முறைப்படி தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். பொதுவாக இந்து முறைப்படி நடக்கும் திருமணம் காலை 5 மணி முதல் மதியம் 12 மணிக்குள் நடக்கும் என்றால் சரிதான்.

நான் AWPS செல்லும்போது நெப்போலியன் என்பவரை விசாரித்த விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் RMMCH மருத்துவ மனையில்

இருந்த போது எதிரியை டாக்டர் கோட் உடன் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் மகன் படித்த பட்டதாரி என்றால் சரிதான். எனது குடும்ப வருமாணம் என் மகன் சம்பாரிக்கும் வருமாணம் தான் என்றால் சரிதான். வீட்டில் இருந்த ஆடு மாடுகளை விற்பனை செய்து என் மகனுக்கு விமர்சியாக திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு அவர் வேறு ஒரு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு வரதட்சணையாக பவுன் நகைகள் மற்றும் இரு சக்கர வாகனம் எடுத்து கொடுக்காத ஒரே காரணத்திற்காக என் உறவினர்கள் திருமணத்தன்றோ திருமணத்திற்கு மறு நாளோ முதலிரவு ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் எதிரியுடன் என் மகன் குடும்பம் நடத்த மறுத்துள்ளார் என்று எதிரி மீது பொய்யாக புகார் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஆஜர்எதிரி என் மகனை திருமணம் செய்து கொண்டு தற்போது எதிரியுடன் குடும்பம் நடத்த தயாராக உள்ளார் என்றாலும் என் மகனை விட்டால் எதிரிக்கு யாரும் கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரி என் மகனை திருமணம் செய்து கொண்டு என் மகன் சொன்ன பொய்யால் இந்த சமூகத்தில் நிர்கதியாக நிற்கிறார் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC. 77/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சிவச்சந்திரன் | Prosecution | P.W –1 Cross |
| Father Name | ஜீவா | Court | JM, Court, Sirkali. |
| Village | திட்டைரோடு | Taluk | சீர்காழி |
| Age | 31/2025 | District | மயிலாடுதுறை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **18.11.2025.**

<u>சத்தியபிரமாணம் பெறப்பட்டது.</u> **எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A. B.Ed. என் வயது 31 திருமணமான போது வயது 30 என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போது எதிரிக்கு 23 வயது இருக்கும் என்றால் சரிதான். என் திருமணத்தின் போது எதிரிக்கு 23 வயது என்று நான் தெரிந்து கொண்டேன் என்றால்சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் திருமணத்தின் போது RBL வங்கியில் மேலாளராக பணியாற்றினேன். தற்சமயம் மைக்ரோ பைனான்சில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு நெப்போலியன் போன் செய்தார் அந்த போன் நம்பர் என்ன என்றால் எனது செல் போனை பார்த்தால் தான் சொல்ல முடியும். செல்போனை பார்த்து சொல்ல முடியுமா என்றால் முடியும். (சாட்சி தன்னுடைய செல்போனை எடுத்து பார்த்து நெப்போலியனின் போன் நம்பர் 6379183559 என்று கூறுகிறார்).

நான் கொடுத்த புகார் மனு 25.01.2025 ல் செல்போன் எண் குறிப்பிட்டு கொடுக்கப்பட வில்லை என்றால் சரிதான். எனது அம்மா RMMCH மருத்துவ மனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததற்கான சான்றாக ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை எங்கு பார்த்தேன் என்றால் தேதி மாதம் குறிப்பிட்டு சொல்ல இயலாது 2024 ஜனவரி அல்லது பிப்பிரவரி யில் எதிரியை எனக்கு அறிமுகமானார். நான் சிதம்பரம் RMMCH மருத்துவ மனையில் தான் முதலில்

எதிரியை சந்தித்தேன் என்றால் சரிதான். நான் எத்தனை வருடம் எதிரியும் நானும் காதல் செய்தோம் என்றால் சுமார் 1 வருடம் ஆகும். நான் எதிரியை காதலிக்கும் போது எதிரியின் செல்போனில் இருந்து செய்திகள் மற்றும் தவறான செய்திகளை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் 1 வருட காலம் பழக்கத்தில் இருந்தேன் என்றாலும் அவர் என்ன வேலை செய்கிறார் போன்ற தகவல் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் RMMCH மருத்துவ மனையில் கோட் உடன் தான் பார்ப்பேன்.

நான் எதிரி யாருக்காவது சிகிச்சை அளித்தோ அல்லது அறுவை சிகிச்சை செய்தோ நேரில் பார்த்தேனா என்றால் பார்த்ததில்லை ஏனெனில் அவர் என்னை மருத்துவமனைக்கு உள்ளே அனுமதித்ததே கிடையாது. எனக்கு எதிரி மீது சந்தேகம் ஏதேனும் வந்ததா என்றால் சந்தேகம்வராத மாதிரி தான் அவர் நடந்து கொண்டார். 1 வருட காதலித்த போது எதிரி லட்சுமி மீது எந்த சந்தேகமும் இல்லை என்றால் சரிதான். என் தாயார் வாசுகி RMMCHயில் உள் நோயாளியாக இருந்த போது எப்போது அறிமுகப்படுதினேன் என்றால் மருத்துவ மனையில் அறிமுகப்படுத்தவில்லை . எதிரியை வீட்டில் தான் அறிமுகப்படுத்தினேன். தேதி என்ன என்றால் கடந்த வருடம் மே அல்லது ஜீன் இருக்கும்.

நான் காதலித்து வந்த காலகட்டத்தில் அவரது உறவினர் பற்றி சொன்னாரா என்றால் எதிரி அவர் உடன் பிறந்தவர்கள் 6 பேர் மற்றும் அப்பா அம்மா இல்லை என்று கூறினார். அவர் அம்மா பேர் என்ன என்றால் ஜீவலட்சுமி என்றும் அப்பா ராஜா என்றும் கூறினார். நான் வீட்டுக்கு எதிரியை அழைத்து வரும் போது அம்மா வாசுகி, சித்தி மகள் சுஜி, சித்தி மகன் சுஜேந்திரன் உடன் இருந்தனர். அன்றைய தினமே என் அம்மாவிடம் திருமணத்திற்கு சம்மதம் வாங்கி விட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு 7 மாதம் கழித்து தான் எங்களுக்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். இருவரும் இடைப்பட்ட காலங்களில் முழு மனதோடு காதலித்து வந்தோம் என்றாலும் சரிதான்.

எனது புகாரில் 20.01.2025 அன்று இரவு 7.00 மணிக்கு திருமணம் எதிரிக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது திருமணத்திற்கு 24.12.2024 அன்றே திருமணத்திற்கு மண்டபம் முன்பதிவு செய்தோம் என்றால் சரிதான். அந்த

முன்பதிவு நான் தான் முன்பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் முன்பதிவு செய்த விபரம் நான் காதலித்து வந்த எதிரிக்கு தெரியப்படுத்தினேன் என்றால் தெரிய படுத்தினேன். நான் பிறந்தது முதல் திருமணமாகும் வரை இந்து மதத்தினை வழிபாட்டினை பின்பற்றுகிறேன் என்றால் சரிதான். எங்கள் திருமண பத்திரிக்கையில் எதிரியை எந்த ஊர் அரசு மருத்துவர் என குறிப்பிட்டு பத்திரிக்கை அடிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அடிக்கவேண்டாம் என்று எதிரி தான் சொன்னார்.

எங்களது திருமண பத்திரிக்கையில் நேரம் என்ன கூறப்பட்டுள்ளது என்றால் மாலை 4.30 முதல் 5.30 வரை என்று கூறப்பட்டுள்ளது. நான் காவல்நிலையத்தில் விசாரணையில் கொடுத்துள்ள திருமண பத்திரிக்கையில் உறவினர்கள் பெயர் குறித்து அச்சடிக்கவில்லை என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு எனது மாத வருமாணம் என்ன என்றால் **ரூ. 38 ஆயிரம்** ஆகும். என் உடன் பிறந்த சகோதரிகள் அனைவரும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர்களுக்கு நான்தான் திருமணம் செய்து முடித்து வைத்தேன் என்றாலும் சரிதான். எனக்கு மேற்படி வங்கி மேலாளலர் வருமாணத்தை வேறு எந்த வருமாணமும் இல்லை என்றால் சரிதான்.

திருமணத்திற்கு பின்பு எதிரியை 1 நாள் நான் பூம்புகார் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். நான் திருமணத்தின் போது எதிரிக்கு சுமார் 4 பவுன் நகைகள்(ஜோடு, ஜிமிக்கி, தாலி) போட்டேன் என்றால் சரிதான். மேற்படி நகைகள் போலிசார் விசாரணையின் போது நான் எதிரிக்கு கொடுத்த நகைகள் பற்றிய ஆதாரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சீர்காழி AWPS காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது எதிரி என்னுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். நெப்போலியன் என்பவர் 2017 முதல் 2021 வரை தான் குடும்பம் நடத்தியதாகவும் அவரிடம் நகைகளை ஏமாற்றியதாக போலிசாரிடம் அவர் புகார் கொடுத்தாரா என்ற விபரம் என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. நெப்போலியனை நான் எப்போது பார்த்தேன் என்றால் காலை 9.00 மணிக்கு 25.01.2025 ம் தேதி அன்று நான் நெப்போலியனை சீர்காழி AWPS காவல் நிலையத்தில் சந்தித்தித்தேன்.

நான் புகார் கொடுத்த பிறகு சீர்காழி AWPSயில் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் அன்றைய தினம் முழுவதும் வி சாரணை

செய்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை. அன்றைய தேதி என்னை போலிசார் விசாரிக்கும் போது காவல் நிலையத்தில் விசாரணையின் போது என் உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எங்கள் ஊர் முக்கியஸ்தர்கள், சுந்தர்ராஜ், முடிசூடிநாதன், அபினேஷ், அய்யப்பன், பிரதீபன், போன்ற பலர் இருந்தனர். மற்ற நபர்கள் எனக்கு ஞாபகமில்லை. என்னுடன் என் தாயார் காவல் நிலையம் வரவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் முன்பே நெப்போலியன் சீர்காழி AWPS காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு ஏற்கனவே திருமணம் ஆகி ஆண் குழந்தை .–1 பெண் குழந்தை –1 இருந்ததாக விபரம் நான் கேள்வி பட்ட பிறகு தான் தெரிந்து கொண்டேன். நேரடியாக நான் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை.

நான் திருமணத்திற்கு பிறகு எனது திருமண போட்டோவை Face Bookயில் நானும் எனது நண்பர்களும் பதிவிட்ட விபரத்தினை போலிசார் விசாரணையில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காதலிக்கும் கால கட்டத்தில் ஆணோ பெண்ணோ இருவரில் ஒருவர் தான் முதலில் காதலை வெளிப்படுத்த முடியும் என்றால் சரிதான். எனது புகார் மனுவில் 25.01.2025 ல் எதிரி நிறைய ஆண்களுடன் தொடர்பு வைத்ததாக நான் கூறினேன் என்றாலும் அதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியின் மீது கோட்டு போட்டுள்ளதாக கூறியுள்ளேன் அதற்கான புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2024ல் எதிரியை காதலிக்கும் போது ஏதேனும் பரிசு பொருட்கள் வாங்கி கொடுத்தேனா என்றால் புடவை எடுத்து கொடுத்தேன் மேலும் பணமும் கொடுத்துள்ளேன்.

எதிரி மருத்துவர் கூறிய நிலையில் அவர் மாத வருமாணம் பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் என்னிடம்சொல்லவில்லை. நான் எனது புகாரில் எதிரி கடலூர் அரசு மருத்துவ மனையில் வேலை பார்த்தாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடலூர் அரசு மருத்துவ மனையில் டாக்டர் கோட்டுடன் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை ஆனால் சிதம்பரத்தில் பார்த்துள்ளேன். சிதம்பரம் அரசு மருத்துவ மனையில் ஆஜர் எதிரியை வேலை பார்த்துள்ளதாக எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறு. எனது 20.01.2025 ல் நடந்த திருமணத்தின் போது

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள படத்தை தவிர 1 படத்தை தவிர வேறு ஏதேனும் புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

எதிரியை தான் முதலில் என் செல்போன் நம்பரை வாங்கினார் என்றால் சரிதான். நான் ஏன் என் நம்பரை கேட்கிறீர்கள் என்று கேட்ட போது உங்கள் தாயாரின் உடல் நிலை பற்றி உங்களுக்கு தகவல் கொடுக்க வாங்கினேன் என்று கூறினார். என் தாயாரின் மருத்துவ குறிப்புகளை என்னிடம் எதிரி படித்து கூறினாரா என்றால் இல்லை. எனது செல்போனிலிருந்து வாட்ஸ் அப் மூலம் மருத்துவ குறிப்புகளை பரிமாறியுள்ளேன் அதை படித்து பார்த்து பயப்படும் அளவிற்கு உங்கள் தாயாருக்கு ஒன்றும் இல்லை என்று எதிரி என்னிடம் கூறினார் என்றால் சரிதான். எங்களது 1 வருட பழக்கத்தில் எதிரி எங்கு எந்த கல்லூரியில் மருத்துவம் படித்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அது சிதம்பரம் அரசு மருத்துவ மனை மற்றும் மருத்துவ கல்லூரியில் தான் படித்தேன் என்று கூறினார். எதிரியுடன் பணியாற்றிய மருத்துவர் பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் செல்போனில் இருந்து காவியா என்ற ஒரு நபர் தன்னை மருத்துவர் என்று கூறி என்னிடம் பேசினார்.

காவியா என்பவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் இல்லை. திருமணத்திற்கு எதிரியின் நண்பர்கள் யாரும் வரவில்லை என்றால் சரிதான். வாசுகி என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். தீபன் மற்றும் அபினேஷ் என்பவர் எனது நண்பர்கள் என்றால் சரிதான். நெப்போலியன் என்வரை 25.01.2025 அன்று தான் AWPS சீர்காழியில் சந்தித்தேன் என்றால் சரிதான். எதிரியுடன் பழகிய 1 வருட காலத்தில் எதிரிக்கு பரிசு பொருட்கள் ஏதேனும் கொடுத்துள்ளேன் என்றால் காதலால் கொடுத்துள்ளேன். காதலித்த போது அவர் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை நான் தான் கொடுத்தேன். அந்த எதிரியுடன் பழகிய 1 வருட காலத்தில் எங்களுக்குள் எந்த வித சண்டை சச்சரவும் இல்லை என்றால் சரிதான்.

திருமணம் முடித்து 2 நாட்கள் கழித்து எதிரி சிதம்பரம் செல்ல வேண்டும் என்ற கூறினார் ஏன் என்று நான் கேட்டதற்கு மருத்துவ மனையிலிருந்து அறுவை சிகிச்சை செய்ய செல்போனில் அழைப்பு

வந்துள்ளது நான் செல்ல வேண்டும் என்று கூறினார். நான் ஒருவாரம் விடுமுறை எடுத்துக்கொள்ள கூறினேன் ஆனால் அவர் விடுமுறை இல்லை அதனால் போட முடியாது என்று கூறினார். எதிரியின் செல்போனில் ஒரு அழைப்பு வந்தது அது யார் என்று கேட்தற்கு டாக்டர் என்று கூறினார் யார் என்று தெரியவில்லை. நானும் எதிரியும் முழுமனதோடு திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் வெவ்வேறு சமூகம் என்றாலும் எனக்கு முழு சம்மதத்துடன் தான் எதிரியை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பின்பு எதிரியுடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டேனா என்றால் இல்லை. திருமண தேதி அன்று திருமணம் முடிந்த நாள் இரவு எங்களுக்கு முதலிரவு ஏற்பாடு செய்தார்களா என்றால் செய்யவில்லை. நான் எதிரியுடன் பழகிய ஒரு வருட காலத்தில் ஏதேனும் பரிமாற்றம் மற்றும் உடலுறவு ஏதேனும் நடைபெற்றதா என்றால் இல்லை. அப்படி ஏதும் நடக்கவில்லை.

திருமணம் என்பது குடும்பத்தை விரிவு செய்வதற்கும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் திருமணம்செய்து முடிப்பார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரி 20.01.2025 க்கு முன்னால் என் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவர் 2 நாட்கள் இருந்தார். அந்த காலகட்டத்தில் எதிரி என் அம்மாவுடன் தான் இருப்பார் என்றால் சரிதான். நாங்கள் இந்து முறைப்படி தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் தாலி மட்டும் பெரியோர்கள் முன்னிலையில் எதிரிக்கு கட்டி உள்ளேன். எங்கள் திருமணத்திற்கு சுமார் 500 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு என்ன என்ன ஊரில் உறவினர்கள் இருக்கிறார்கள் என்றால் இளையமதுகூடம், மணிகிராமம், காட்டுமன்னார்கோயில், திருவெண்காடு, சீர்காழி என்ற ஊரில் இருக்கிறார்கள். மேலும் எனது நண்பர்கள் புத்தூரில் தீபன், பிரதீபன் ஆகிய இருவரும் இருக்கிறார்கள் அவர்கள் எத்தனை வருடமாக பழக்கம் என்றால் இரண்டு வருடம் பழக்கம். 2024 மே முதல் நாங்கள் இருவரும் காதலித்த விபரம் அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர்களுக்கு தெரியும்.

தீபன் , பிரதீபன் இருவரும் புத்தூரில் இருந்து தான் வேலைக்கு வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதே புத்தூரில் தான் நெப்போலியன் இருக்கிறாரா என்றால் ஆமாம். சுமார் 1 கிமீ

தூரம் இருக்கும். எனது திருமணம் முடிந்து நாங்கள் சீர்காழீ டவுனுக்கு இருசக்கர வாகனத்தில் பலர் பார்க்கும் வகையில் சென்றுள்ளோமா என்றால் சென்றுள்ளோம். இந்து முறைப்படி திருமணத்திற்கு பிறகு கணவன் மனைவி இருவரும் வெளியில் செல்வார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியும். அவ்வாறு புத்தூரில் இருக்கும் நெப்பபோலியன் மற்றும் ஆஜர் எதிரி இது போல் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்றிறுப்பார்கள் என்றால் அப்படி கடைத்தெருவிற்கு சென்றிறுந்தால் வாய்ப்பு உண்டு. எனது புகாரில் எதிரியும் நெப்போலியனும் சென்னை சென்றதாக புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் கூறிய புகாரில் சிதம்பரம் ராஜாவும் எதிரியும் திருமணத்திற்கு முன்பு இருசக்கர வாகனத்தில் சென்றிருப்பார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அது போல நெப்போலியன் மற்றும் ராஜா என்பவர்களிடமும் ஆஜர் எதிரி நகை பணம் திட்டமிட்டு ஏமாற்றி இருந்தால் என்னைப்போல் அவர்கள் புகார் அளித்திருப்பார்கள் என்றால் சரிதான்.

எதிரி திருமணத்திற்கு பின்பு திருமணம் ஆன சில வருடங்கள் கழித்து கணவரை இழந்தவர் என்றால் சரிதான். எதிரி 2024 ம் வருடம் RMMCH மருத்துவ சிகிச்சைக்கு வந்த போது அவருக்கும் எனக்கும் காதல் ஏற்பட்டு காதலித்த ஒரு வருட காலத்தில் ஆஜர் எதிரி வாழ்க்கயைில் பட்ட துன்பத்தை என்னிடம் சொல்லி அதனை நான் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு என் தாயார் மற்றும் உறவினரிடம் சொ'ல்லி நன்கு அறிமுகமான பிறகு தான் எனக்கும் ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை எந்த காலத்திலும் எப்போதும் ஏமாற்றவில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு அவர் வேறு ஒரு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு வரதட்சணையாக பவுன் நகைகள் மற்றும் இரு சக்கர வாகனம் எடுத்து கொடுக்காத ஒரே காரணத்திற்காக என் உறவினர்கள் திருமணத்தன்றோ திருமணத்திற்கு மறு நாளோ முதலிரவு ஏற்பாடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் எதிரியுடன் குடும்பம் நடத்த மறுத்து ஆஜர் எதிரி என்னிடம் காதலித்த போது சொன்ன குடும்ப விஷயங்களை பெரிது படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஆஜர்எதிரி என்னை திருமணம் செய்து கொண்டு தற்போது

என்னுடன் குடும்பம் நடத்த தயாராக உள்ளார் என்றாலும் என்னை விட்டால் எதிரிக்கு யாரும் கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரி என்னை திருமணம் செய்து கொண்டு நான் சொன் பொய்யால் இந்த சமூகத்தில் நிர்கதியாக நிற்கிறார் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாணை இல்லை.**